
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1020

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## உடன்பிறப்பே

**நீரை.மகேந்திரன்**

136

தி.மு.கழக வரலாற்றில் இடம்பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த க.நெடுஞ்செழியன் அவர்களின் வரலாற்றினைப் பார்க்கலாம்.

# க.நெடுஞ்செழியன்; ‘இன உரிமைப் போராளி!’



திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு ரத்தமும் வியர்வையும் சிந்தி வளர்த்ததில் அடிமட்டத் தொண்டர்களுக்கு எவ்வளவு பங்கு உண்டோ – அதேபோல அறிவுத் தளத்தில் செயல்பட்டு இந்த இயக்கத்தை வளர்த்ததில் பேராசிரியர்களுக்கும், தமிழாசிரியர்களுக்கும் பெரும் பங்கு உண்டு. அப்படி கட்சிக்குள் இணையாமலேயே, நேரடி அரசியல் களத்தில் பங்கெடுக்காமலேயே கழக வளர்ச்சிக்கு உறுதுணையாக நின்ற பேராசிரியர், கலைஞரின் உடன்பிறப்பு க.நெடுஞ்செழியன் . “தமிழ் மரபும், பெருமையும் காத்திடும் தமிழ் மான மறவர்” என்று இனமானப் பேராசிரியர் அவர்களால் போற்றப்பட்டவர் க.நெடுஞ்செழியன்.” தந்தை பெரியார் குறித்தும், திராவிட இயக்கம் பற்றியும் தொடர்ந்து எழுதிய பேராசிரியர். எழுதியவர் மட்டுமல்ல, இன உரிமைப் போராளி அவர்” என இன்றைய கழகத் தலைவர் போற்றிய கழக முன்னோடி.

பேராசிரியர் நெடுஞ்செழியன் அவர்கள் திராவிட இயக்கக் குடும்பத்தைச் சேர்ந்தவர். அவரது அப்பா, சித்தப்பா ஆகிய இருவரும் தந்தை பெரியாருக்கு நெருக்கமானவர்கள். 1949 ல் திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கியபோது, குடும்பத்தினர் அனைவரும் கழகத்தில் இணைந்து கொண்டனர். அவர்களது வழியில் வந்த நெடுஞ்செழியன் அவர்களும் இளமைக் காலத்தில் இருந்தே திராவிட கருத்தியலில் ஈடுபாடு கொண்டு வளர்ந்து வந்தவர்.

திருச்சி மாவட்டத்தில், லால்குடி அருகே அன்பில் படுகைதான் நெடுஞ்செழியன் அவர்கள் பிறந்த ஊர். 1944 ஆம் ஆண்டு ஜூன் 15 அன்று பிறந்தவர். பெற்றோர் கந்தசாமி – மீனாட்சி. தொடக்கக் கல்வியை உள்ளூரிலும், பின்னர் கும்பகோணம் அரசு கலைக் கல்லூரியிலும், சென்னை மாநிலக் கல்லூரியிலும் பயின்றவர். இந்தித் திணிப்புக்கு எதிரான போராட்டத்தில் தீவிரமாக களம் கண்டவர். 1968 ஆம் ஆண்டு, பேரறிஞர் அண்ணா ஆட்சிக் காலத்தில் சென்னையில் நடைபெற்ற இரண்டாவது உலகத்தமிழ் மாநாட்டில் மாணவர்களுக்காக நடத்தப்பட்ட கவிதைப் போட்டியில் பங்கேற்று முதல் பரிசை அண்ணாவின் கரங்களில் இருந்து பெற்றவர் நெடுஞ்செழியன்.

1969 ஆம் ஆண்டில், பேராசிரியராக பணியைத் தொடங்கிய நெடுஞ்செழியன் அவர்கள், திராவிட இயக்கத்துக்குத் தேவையான வரலாறு, அரசியல், தத்துவ நூல்களை எழுதித்தரும் பேராசிரியர்களில் ஒருவராக விளங்கினார். திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழகம், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் ஆகியவற்றில் பேராசிரியராக இருந்தாலும் தன்னுடைய அரசியல் அறிவுப் பணியை விடாமல் தொடர்ந்தவர் பேராசிரியர் நெடுஞ்செழியன்.

“சிலர் நல்ல வேலை கிடைத்ததும் இயக்கத்துக்கான பணிகளை மறந்துவிடுவார்கள். ஆனால் நெடுஞ்செழியன் அவர்கள் அதனையும் சேர்த்துச் செய்தவர்” என நெடுஞ்செழியன் அவர்களின் நூல் வெளியீட்டு விழா ஒன்றில் இன்றைய கழகத் தலைவர் அவர்கள் தனது உரையில் பெருமையுடன் குறிப்பிட்டுள்ளார்.

### சமூகநீதி எழுத்துகள்

இந்திய சமூகப் புரட்சியில் திராவிட இயக்கத்தின் கொடை, பக்தி இயக்கங்களும் வைதீக எதிர்ப்பும், தமிழ் எழுத்தியல் வரலாறு, இந்தியப் பண்பாட்டில் தமிழும் தமிழரும்,

தமிழரின் அடையாளங்கள், சங்ககாலத் தமிழர் சமயம் என முக்கிய நூல்களை எழுதியவர் நெடுஞ்செழியன். தமிழகத் தத்துவ நூல்களின் வரிசையில் தலைசிறந்த நூல்களில் ஒன்றாக மதிக்கப்படக்கூடிய ’ஆசீவகமும் ஐயனார் வரலாறும்’ என்ற நூலை எழுதி பெரும் தாக்கத்தை ஏற்படுத்திய சமூகநீதிப் பேராசிரியராக விளங்கினார்.

1994-ஆம் ஆண்டு, திருச்சியில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் பிரிவினைக்கு ஆதரவாக பேசினார் என்றும், தமிழ்நாட்டை தனியாக பிரிக்க சதி செய்தார் என்றும் பொய்க் குற்றம் சாட்டி, அன்றைய அ.தி.மு.க. ஆட்சி’ தடா’ சட்டத்தில் கைது செய்து சிறையில் அடைத்தது.

அந்த வழக்கில் ஜாமீன் பெற்று வெளிவந்தவரை, இவர் நடத்திய அரசியல் பயிற்சி வகுப்பில் கர்நாடகத்தைச் சேர்ந்த பிரிவினைவாத இளைஞர் ஒருவர் கலந்து கொண்டார் என பொய்வழக்கு போடப்பட்டு கைது செய்யப்பட்டார்.

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் பணியில் இருந்த காலத்திலேயே, இவர் தலைமறைவாக இருந்ததாகவும் தேடியும் கண்டுபிடிக்க முடியவில்லை என்று கர்நாடக நீதிமன்றத்தில் காவல்துறை கூறியது. அதையும் ஏற்றுக் கொண்ட நீதிமன்றம் அவரை சிறையில் அடைத்தது.

அந்தப் பொய் வழக்கில் 32 மாதங்கள் சிறையில் இருந்தபோதும், அவரது மன உறுதி குறையவில்லை.

**“பொய்வழக்குப் போட்டு**
**புகழையெல்லாம் தீய்த்து**
**கைவிலங்கு மாட்டி என்னை**
**கடுஞ்சிறையில் பூட்டி**
**வெங்கொடுமை செய்தாலும்**
**நான் வீழ்ந்துவிட மாட்டேன்.**
**பங்கமெல்லாம் கண்டு**
**நான் பயந்துவிட மாட்டேன்.**
**வஞ்சத்தின் முன்னே**
**நான் மண்டியிடமாட்டேன்”** – என்று கவிதை எழுதி தனது கொள்கை உரத்தைக் காட்டியவர்.

சிறையில் இருந்தபோதுதான் சங்ககாலத் தமிழர் சமயம், தமிழரின் அடையாளம், சித்தன்னவாசல் ஆகிய புத்தகங்களை எழுதினார். இதில் ’தமிழரின் அடையாளம்’ என்கிற நூல் தமிழ்நாடு அரசின் பரிசையும், ’சித்தன்னவாசல்’ என்ற நூல் கலைஞர் பொற்கிழி விருதையும் பெற்றுள்ளன. இறுதியில், வழக்கில் இருந்து குற்றமற்றவராக விடுவிக்கப்பட்டார்.

பேராசிரியர் நெடுஞ்செழியன் எழுதிய ‘ஆசீவகமும் ஐயனார் வரலாறும்’ என்ற ஆய்வு நூல், தமிழ் அறிவியத்துக்குக்கு அவர் அளித்த முக்கிய பங்களிப்பு என தமிழ் ஆய்வாளர்களால் கொண்டாடப்படுகிறது. குறிப்பாக, ஆரிய வழிபாட்டு மரபுக்கும், தமிழரின் வழிபாட்டு மரபுக்குமான போராட்டத்தினை சொல்லும் நூலாக விளங்குகிறது.

கல்வி நிறுவனங்களில் பணியாற்றிக் கொண்டே, திராவிட முன்னேற்றக் கழகத்தில் நேரடியாக ஆற்றிய பணிகளில் குறிப்பிடத்தக்கது ‘பெரியாரியல்’ பாடத்திட்டம் உருவாக்கம். கழக முன்னோடி முரசொலி மாறன் அவர்கள் முன்னெடுப்பில், தலைவர் கலைஞர் அவர்களால் கழகத்தின் சார்பில் திராவிட இயக்கம் குறித்த அஞ்சல் வழிக் கல்வி தொடங்கப்பட்டது. அதற்கான பாடத்திட்டத்தை உருவாக்கும் குழுவில் பேராசிரியர் நன்னன் அவர்களோடு இணைந்து உருவாக்கியவர் நெடுஞ்செழியன் அவர்கள்.

இவரது பங்களிப்புகளைப் போற்றும் வகையில், 2021 ஆம் ஆண்டில் கழக ஆட்சி அமைந்ததும், தமிழ்நாடு அரசின் செம்மொழி விருது வழங்கிப் பெருமை சேர்த்தார் இன்றைய கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்.

2022 நவம்பர் 11 அன்று உடல் நலக்குறைவு காரணமாக இயற்கை எய்தியவருக்கு தமிழ் அறிவுலகமே திரண்டு அஞ்சலி செலுத்தியது. ‘தமிழுக்கும் தமிழினத்துக்கும் திராவிட இயக்கத்துக்கும் தொண்டாற்றுவதற்காகத் தனது வாழ்நாளை ஒப்படைத்துக் கொண்டவர் பேராசிரியர் நெடுஞ்செழியன்’ என இரங்கல் எழுதினார் கழகத் தலைவர்.

அவரது நூல்கள் அனைத்தும் தமிழ்ச் சமுதாயத்துக்கு எந்நாளும் உணர்ச்சியூட்டும் ஆயுதமாகத் திகழுபவை. அந்தப் படையை வழிநடத்தும் திராவிட முன்னேற்றக் கழகம்.

...துடிக்கும்

> **‘தமிழுக்கும் தமிழினத்துக்கும் திராவிட இயக்கத்துக்கும் தொண்டாற்றுவதற்காகத் தனது வாழ்நாளை ஒப்படைத்துக் கொண்டவர் பேராசிரியர் நெடுஞ்செழியன்!’**

## அறிவுத் திருவிழாக்கள் தொடரட்டும்!

வள்ளுவர் கோட்டத்தில், தி.மு.க. இளைஞர் அணி நடத்திக் கொண்டிருக்கும் அறிவுத் திருவிழாவை வரவேற்று பதிவிட்டுள்ளார் எழுத்தாளர் ஷெரீஃப்.அஸ்கர் அலி. அவர் எழுதியுள்ள பதிவில் இருந்து...

வள்ளுவர் கோட்டத்தின் பொன் விழா ஆண்டாக இருப்பதன் காரணத்தால், சுமார் 50 கோடி ரூபாய் செலவில், அதன் கட்டமைப்புகள் முற்றிலும் புதுப்பிக்கப்பட்டு விட்டன. அதற்குப் பிறகான அதன் தோற்றப் பொழிவு நம் அனைவரையும் கவரும் வண்ணத்தில் உள்ளது. தேரை அலங்கரித்து தெருவில் ஓட்டாமல் இருந்தால் எப்படி? அதற்கேற்ற ஆலோசனைகளோடு களத்தில் குதித்த துணை முதலமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் அவர்கள், கருத்தைக் கவரும் ஒரு திட்டத்தைக் கையில் எடுத்து, அதை மின்னலாய் செயல்படுத்த ஆரம்பித்து விட்டார்.

‘அறிவுத் திருவிழா’ என்ற அற்புதமான செயல் திட்டத்தைக் கையில் எடுத்து, அதை நவம்பர் 8-ஆம் தேதி முதல் நடைமுறையில் கொண்டுவந்து விட்டார். அதன்படி, முற்போக்கு புத்தகக் காட்சியும், கலைநிகழ்ச்சிகளும், சிறப்புரைகளும் ஒரு வார காலத்திற்கு நடைபெற்று வருகின்றன. தி.மு.க.- வின் 75- ஆம் ஆண்டு பவள விழா கொண்டாட்டங்களாக இவை அரங்கேறி நடந்து வருகின்றன.

புத்தகக் காட்சியில் 60 புத்தக அங்காடிகள் அமைக்கப்பட்டு, அதில் மார்க்ஸ்ஸியம், தலித்தியம் மற்றும் திராவிடம் சார்ந்த அரசியல் புத்தகங்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. ஆயிரத்துக்கும் மேற்பட்ட தலைப்புகளில் புத்தகங்கள் வைக்கப்பட்டுள்ளன. எனவே, நம்மிடையே உள்ள மூன்று தலைமுறைகளுக்கும் உரிய மிகப் பெரிய அரசியல் உரையாடல் இங்கே தடையில்லாமல் தொடர்கிறது. குறிப்பாக, இன்றைய மதவாத பாசிச ஏகாதிபத்திய அரசியல் சூழலில், நூற்றாண்டு பாரம்பரியமிக்க திராவிட இயக்கமும், கட்சியும், ஆட்சியும் இப்படியான அறிவுத் திருவிழாக்களை, ஆண்டுதோறும் நடத்த வேண்டும். மேலும், இதே மைய மண்டபத்தில் ஆண்டுக்கு நான்கைந்து பண்பாட்டு நிகழ்ச்சிகளையும், பயிலரங்குகளையும், கருத்தரங்குகளையும் நடத்திடல் வேண்டும்.

மொழி சார்ந்த கட்டமைப்பில், சமூக அரசியல் சார்ந்த விவாதங்களை முன்னெடுக்கும் போது தான், நமது அறிவு விரிவடையும். அது நமது கற்பனைத் திறன்களை ஊக்குவித்து, அது நம்முடைய மாநிலத்தின் மனிதவளத்தை செம்மைப்படுத்தும்.”

## ஃப்ளாஷ்பேக்



கு.அமரேசன் அப்பு



### தலைவரை சந்தித்து மகிழ்ந்தேன்!

2015-ஆம் ஆண்டு வாக்கில், சென்னை அண்ணா அறிவாலயத்தில் அன்றைய கழகப் பொருளாளர், கழக இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய கழகத் தலைவர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை சந்தித்து புகைப்படம் எடுத்து மகிழ்ந்தேன். இந்த புகைப்படம் எனது வாழ்நாளில் மறக்க முடியாததாக அமைந்தது.

**– கு.அமரேசன் அப்பு,**
**மாணவர் அணித் துணை அமைப்பாளர்,**
**அண்ணா நகர் தெற்குப் பகுதி, சென்னை மேற்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை – 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### இடைத்தேர்தல்களைப் பயன்படுத்திய கழகம்!

1957-ஆம் ஆண்டு,சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டு, 15 இடங்களில் கழகம் வெற்றிபெற்று பணியாற்றி வந்தது. அதற்கடுத்து, 1958-ஆம் ஆண்டு ஜூலைக்குள் நடைபெற்ற இரண்டு இடைத்தேர்தல்களையும் சந்தித்தது. திருவாடானை மற்றும் தூத்துக்குடி சட்டமன்றத் தொகுதிகளில் போட்டியிட்டு, தோல்வியைத் தழுவியது. ஆனால், கணிசமாக வாக்குகளைப் பெற்றிருந்தது. மக்கள் ஆதரவை அறிந்து கொள்ளவும், கட்சியை வளர்க்கவும், இந்த இடைத்தேர்தல்களை கழகம் பயன்படுத்திக் கொண்டது.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.